39418
30 JUL 2008
நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம் சென்னை-600 005

கருக்கம்

பணியமைப்பு – நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ள தலைமைப் பொறியாளர் பணியிடத்தில் திரு. ஆர். இரகுநாதன் அவர்களை ஒப்பந்த அடிப்படையில் தலைமைப் பொறியாளராக பணி அமர்த்தி ஆணை வெளியிடப்படுகிறது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப3) துறை

அரசாணை (நிலை) எண் 138 நாள் 29.7.2008

ஆடி 14, திருவள்ளுவர் ஆண்டு 2039

படிக்கப்பட்டது:-

1. அரசாணை (நிலை) எண் 125 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 2.7.2008

2. நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் ந.க. எண் 34732/2008/ எப் 4 நாள் 14.7.2008

ஆணை:

ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் அரசாணை (நிலை) எண் 980 நாள் 28.9.1981–ல் நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் ரூ.14300–400–18300 என்ற காலமுறை ஊதியத்தில் தோற்றுவிக்கப்பட்ட கண்காணிப்புப் பொறியாளர் பணியிடத்தை மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ரூ.16400–450–20000 என்ற காலமுறை ஊதியத்தில் தலைமைப் பொறியாளர் பதவியிடமாக நிலை உயர்த்தப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், 1997–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிப் பொறியாளர் பணியமைப்பு விதிகளில் தலைமைப் பொறியாளர் பதவிக்கான வகைமுறைகள் தற்போது இல்லையெனவும், பொதுப்பணித்துறை பணியமைப்பு விதிகளின்படி கண்காணிப்புப் பொறியாளர்கள் தலைமைப் பொறியாளராக பணியமர்த்தப்பட வகை செய்யப்பட்டுள்ளது என்றும், 1997 ஆம் ஆண்டு நகராட்சிப் பொறியாளர் பணியமைப்பு விதிகளில் கண்காணிப்புப் பொறியாளர் பதவியிடம் வகை செய்யப்பட்டுள்ளபோதிலும், கண்காணிப்புப் பொறியாளராக நியமனம் செய்யப்படுவதற்கான தகுதிகள் பெற்ற நகராட்சிப் பொறியாளர் எவரும் இல்லாததால் இதுவரை அப்பதவிக்கு யாரும் நியமனம் செய்யப்படவில்லை என்று நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும், மாநகராட்சிப் பொறியாளர் பணியமைப்பின் மூத்த கண்காணிப்புப் பொறியாளர் திரு. ஆர். இரகுநாதன் ஆவார் என்றும் குறிப்பிட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர் தமது ஆணையரகத்தில் அயற்பணியில் கண்காணிப்புப் பொறியாளராக பணியாற்றி வரும் திரு. ஆர். இரகுநாதன் அவர்களை நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் புதிதாக நிலை உயர்த்தப்பட்ட தலைமைப் பொறியாளர் பதவியிடத்திற்கு பதவி உயர்வின் மூலம் நியமனம் செய்ய பரிந்துரை செய்துள்ளார்.

3. நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பினை அரசு நன்கு பரிசீலனை செய்தது. பரிசீலனைக்குப் பின்னர், நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பினை ஏற்று, நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் தற்போது அயற்பணியில் கண்காணிப்புப் பொறியாளராக பணியாற்றி வரும் திரு. ஆர். இரகுநாதன் அவர்களுக்கு தலைமைப் பொறியாளராகப் பதவி உயர்வு மூலம் நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் தற்போது நிலை உயர்த்தப்பட்டுள்ள தலைமைப் பொறியாளர் பதவியிடத்தில் திரு. ஆர். இரகுநாதன் அவர்களை அயற்பணியில் ஒப்பந்த அடிப்படையில் ரூ 16400–450–20000 என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் தலைமைப் பொறியாளராக பணியமர்த்தி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை 5
திரு. ஆர். இரகுநாதன், தலைமைப் பொறியாளர்,
நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை 5
(நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக)
ஆணையர், திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி
இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை, குறளகம், சென்னை 108
நகல் :
நிதித் துறை, சென்னை 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந 2) துறை, சென்னை 9

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

29.7.08

பிரிவு அலுவலர்